# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு – III 2020/21 (நிகழ்நிலை)

## கடல்ச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

**மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயமானது (UNCLOS) சர்வதேசப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான புதிய பல மன்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இது சட்டத்தின் வளர்ச்சி மற்றும் சர்வதேச அமைதியைப் பேணுவதற்கான சாதக பங்களிப்பாகப் பாராட்டப்பட்டது. எவ்வாறாயினும் அதிக எண்ணிக்கையான பிணக்குத் தீர்வு மன்றுகள் காணப்படுகின்றமையானது பொருளலவிலான சட்டம் மற்றும் நடபடிமுறைச் சட்டங்களின் பிளவுகைக்கு காரணமாயமையும் எனவும் அது சர்வதேசச் சட்டத்தின் ஒத்திணங்கிச் செல்கின்றமையினை சேதப்படுத்தலாம் எனவும் சில சட்டவறிஞர்கள் எச்சரிக்கின்றனர்.

   மேற்கூறப்பட்ட கூற்றின் பின்னணியில் இச்சமவாயத்தின் (UNCLOS) வகிபாகம் மற்றும் அதன் பிணக்குத்தீர்வு செயன்முறை என்பவற்றை தீர்க்கப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் நுணுக்கமாக ஆரரய்க.

   (100 புள்ளிகள்)

2. ‘‘ஆதனா’’ என்பது சிறிய பல கடலோரத் தீவுகளை உள்ளடக்கிய வட துருவப் பிராந்தியத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய கரையோர அரசாகும். அண்மைய காலம் வரை ஆதனாவின் ஆள்புல நிலப்பரப்பின் கணிசமான பகுதியான சிறிய தீவுகள், பெரிய விரிகுடாக்கள் மற்றும் அருகிலுள்ள கடல் என்பன நிரந்தரமாகப் பனியால் மூடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இப்பகுதியில் கடல் மற்றும் நிரந்தர நிலப்பகுதியில் பனி உருக்கத்தின் அதிகரிப்பால் தமது நிலவரைப்படங்களை மீள வரையவும் தற்போதைய கடல்சார் மண்டலங்கள் தொடர்பிலான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை ரத்து செய்வதனை தூண்டும் வகையில் ஆதனாவின் கரையோரம் பாரியளவில் மாற்றமடைந்துள்ளது. செய்தி அறிக்கைகளில் ஆதனா தன்னையொரு தீவுக் கூட்ட அரசாக (Archipelagic State) பிரகடனப்படுத்த இருப்பதாகவும் நேர் அடிக்கோட்டை (Straight Baseline) உபயோகிக்க உள்ளதாகவும் அனைத்து

குடாக்களையும் உள்ளக நீர்ப்பரப்பிற்குள் சேர்த்துக்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமையால் ஏனைய அரசுகள் ஏற்படக்கூடியதான மாற்றங்கள் தொடர்பில் கவலையடைகின்றன. ஆதனா 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் கடல்ச் சட்டம் தொடர்பான சமவாயத்தை (UNCLOS) ஏற்றங்கீகரித்திருப்பினும் ஆதனாவின் அரசாங்கமானது இச்சமவாயம் அண்மைய காலங்களில் கரையோர எல்லை மாற்ற சவால்கள் தொடர்பில் காலாவதியானதொன்றாகவே கருத வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தற்போதைய தேவைகளுக்கமைய செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது.

மேற்கூறிய நிகழ்வை 1982ஆம் ஆண்டு இச்சமவாயத்தின் (UNCLOS) ஏற்பாடுகள் மற்றும் எவையேனும் பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு ஆராய்க.

(100 புள்ளிகள்)

3. டொப்லரோன் மற்றும் ஒரியோ ஆகிய இரண்டும் கட்பரி கடற்பரப்பில் அமையப்பெற்றுள்ள கரையோர அரசுகளாகும். டொாப்லரோன் அரசானது தனது முன் அனுமதி மற்றும் டொாப்லரோன் அரசின் பாதுகாப்பு அமைச்சரினால் விதிக்கப்பட கூடியதான அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கவன்றி தனது ஆள்புலக் கடலில் (Territorial Sea) போர்க் கப்பல்கள் நுழைவதற்கும் பயணிப்பதற்கும் தடை விதிக்கும் வகையில் நியதிச் சட்டமொன்றைக் கொண்டுள்ளது. ஒரியோ அரசின் போர்க் கப்பலான *மாரி*, டொாப்லரோன் அரசின் கடற்படையினரினால் நிறுத்தப்பட்டு உடனடியாக குறித்த பரப்பிலிருந்து வெளியேர உத்தரவிடும் போது டொாப்லரோன் அரசின் 10 கடல் மைல்கள் (Nautical miles) எல்லைப் பரப்பில் பயணித்துக் கொண்டிருந்தது. டொாப்லரோன் அரசின் கரையோரத்திலிருந்து 20 கடல் மைல்கள் தூரத்திற்கு நகர்ந்த *மாரி*, குறித்த பரப்பில் தரவுகளை திரட்டுவதற்காக சிறிய நீர்மூழ்கிக் கப்பல்களைச் செலுத்தியது. ஒரியோ இதனை கட்பரி கடற்பரப்பில் போதைப் பொருள் கடத்தல்களை தடுப்பதற்கான பிராந்திய கூட்டுறவுச் செயற்பாடொன்றெனத் தெரிவிக்கின்றது. இருப்பினும் ஒரியோ தமது நியாயாதிக்கத்தை மீறியதாகக் கூறி டொாப்லரோன் *மாரியை* கைது செய்தது

மேற்கண்ட நிகழ்வில் அரசுகளின் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஆராய்க. உமது விடையானது 1982ஆம் ஆண்டு சமவாயத்தின் (UNCLOS) பொருத்தமான ஏற்பாடுகளைக் கொண்டு ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

4. ‘‘கடல்வாழ் உயிரின வளங்களை அடுத்த தலைமுறைக்காகப் பாதுகாத்தல்’’ என்னும் தலைப்பில் பிரதம உரையாற்றுவதற்கு இளைஞர் பேச்சாளரொருவராக உமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பிரதானமாக மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் வெப்பமண்டல கடலோர அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டப் பயிற்சி பெற்றவர் என்பதனடிப்படையில், நீர் கடல்ச் சட்டக் கட்டமைப்பு தொடர்பாக ஆள்புலக் கடல் எல்லைக்கு (Territorial Sea) அப்பால் உயிரின வளங்களை ஆராய்தல், பயன்படுத்தல், பேணல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் உமது உரையில் முன்னிலைப்படுத்த எண்ணியுள்ளீர்.

பிரதம உரையினை எழுதுக.

(100 புள்ளிகள்)

5. நீலக்கடலில் அமையப் பெற்றுள்ள ‘பிரிங்கல்’ என்ற அரசானது அண்மையில் சுதந்திரம் பெற்றதொரு தீவாகும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இரண்டு பெறுமதி மிக்க கனிய படிவுகள் பிரிங்கலின் கரையோரத்திலிருந்து 250 கடல் மைல்கள் (Nautical miles) மற்றும் 500 கடல் மைல்களில் அமையப்பெற்றுள்ள கடற்படுக்கையில் (Sea Bed) கண்டறியப்பட்டுள்ளது. சர்வதேசச் சட்டத்திற்கமைய பிரிங்கல் நீர் மட்டத்திற்கு மேலமைந்துள்ள நிலத்திற்கு மட்டுமன்றி கடல் நீரின் கீழுள்ள நிலம் மற்றும் இயற்கை வளங்களின் மீதும் உரிமை கோர முடியுமென அது அறிந்துக் கொண்டது.

பிரிங்கல் அரசின் நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள் இணைந்து உங்களை நிபுணர் ஆலோசனைக் குழுவில் ஆலோசனை வழங்குவதற்காக நியமித்துள்ளன. நீர் உள்நாட்டு சட்டவாக்கம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தலுக்காக அரசாங்கம் எடுக்க கூடியதான செயற்பாடுகளைப் பரிந்துரைக்கும் வகையில் குறிப்பொன்றை எழுதுமாறு வேண்டப்படுகின்றீர்.

(100 புள்ளிகள்)

6. நீர் கடல்ச் சட்டப் பரப்பில் தேர்ச்சிப் பெற்ற, சயுரி என்ற அரசின் சட்டவரைஞர் திணைக்களத்தின் அதிகாரியொருவராவீர். சயுரி அரசானது பின்வரும் இரண்டு பரப்புக்களில் புதிய நியதிச் சட்டங்களை உருவாக்க தீர்மானித்துள்ளது;

அ. சயுரி அரசின் நீருக்கடி கலாசார மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்;

ஆ. சயுரி அரசின் கடல் நீரில் விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சட்டக் கட்டமைப்பு.

முன்மொழியப்பட்ட புதிய நியதிச்சட்டத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்களை கொண்டுள்ளதான சுருக்கமான உரையினைத் தொடர்புடைய அக்கறைத்தரப்பினர்களை உள்ளடக்கிய குழுவின் முன் மேற்கொள்ள நீர் வேண்டப்படுகின்றீர்.

(100 புள்ளிகள்)

********************